Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 11 ஆம் நாள் றம்ளான் 8 24-1-64 வெள்ளிக்கிழமை இதழ் 347

உங்கள் சமையல் திருப்திகரமாக
இருக்கவேண்டுமானல் சுத்தமான
பொன்னிறமான, காரமான, சுவையான
அம்பாள் மிளகாய்த்தூளை
இன்றே வாங்கி உபயோகியுங்கள்.
எத்தரத்துவாசிகளும் வாங்கி பலனடையும் தூள் நன்கு சுத்தம் செய்து 1 இரு ½ இரு ¼ இரு. பைக்கற்றுகளில் விற்பனையாகிறது.
ஏக விநியோகஸ்தர்கள்:
யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்
150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பூரண உரிமையாளர்:
சி. இரத்தினம்,
அம்பாள் குங்குமம் மா ஆலை,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

# 12 பிக்குகள், 500 பேர்

# உண்ணாவிரதம்

## அரசாங்கம் வந்தாலே உண்ணாவிரதம் நிற்கும்

### தென்னக்கோன் அறிவிப்பு

குருணுகல், வியாழன்

முன்னாள் உதவிநிதிமந்திரி திரு எம். தென்னக்கூனுடன் பன்னிரண்டு பௌத்த பிக்குகளும் மற்றும் 500 பேரும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

கொழும்புக்குச் செல்லும் திட்டத்தை திரு. தென்னக்கூன் கைவிட்டுவிட்டதுடன் தனது குறைகளைக் கேட்டறிவதற்கு அரசாங்கத்தினர் நிக்கவரட்டியாவுக்கு வரவேண்டுமென்று அவர் கூறியுள்ளார். தனது குறைகளை அரசாங்கம் கேட்கும்வரை தமது உண்ணாவிரதத்தைத் தாம் கைவிடப் போவதில்லையென்றும் அவர் அறிவித்துள்ளார்.

# சுகாதார இலாகா சிங்கள குமாஸ்தாக்கள் வெளிநடப்பு

## ஆங்கிலமொழிபெயர்புஇணைக்க! வேண்டுமென்பதற்கு எதிர்ப்பு

### நடவடிக்கை எடுக்குமாறு அத்தியட்சகர் தந்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சுகாதாரசேவை சுப்ரின்டன்ட் காரியாலயத்தில் கடமையாற்றும் சிங்கள குமாஸ்தாக்கள் நேற்றுக் காலை வேலைக்குச் சென்று வரவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டுவிட்டுத் திரும்பிச் சென்றனர். சிங்களத்தில் எழுதப்படும் கடிதங்களுக்கும் குறிப்புக்களுக்கும் ஆங்கில மொழி பெயர்ப்பு இணைக்கவேண்டுமென சுப்ரின்டன்ட் கேட்டதாகவும் அவ்விதம் செய்வது தமது வேலையல்லவென்று தெரிவித்துவிட்டு அவர்கள் வெளியேறியதாகவும் தெரிய வருகிறது.

இந்தக் குமாஸ்தாக்களின் நடவடிக்கை பற்றி விசாரணை செய்யுமாறு கோரி சுகாதார சேவை டைரக்டருக்கு சுகாதார சேவை சுப்ரின்டன்ட் நேற்று தந்தியொன்று அனுப்பியுள்ளார். தமக்கு அனுப்பும் காரியாலயக் கடிதங்களை ஆங்கில மொழி பெயர்ப்புடன் அனுப்புமாறு அத்தியட்சகர் கோரியதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாகவே இவ்வாறு இவர்கள் வெளியேறியதாக அறியப்படுகிறது.

இந்தச் சிங்கள குமாஸ்தாக்கள் சௌக்கிய சேவை அத்தியட்சகருக்கு அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் சிங்களத்தில் கருமமாற்றுவதற்கு அத்தியட்சகர் முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் தாம் சிங்களத்தில் கருமமாற்றிவருவதால் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளதாகவும் அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

இங்கு சிங்கள மொழி அமுல்நடத்தப்படுவது பற்றி அறிந்துகொள்வதற்காக சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்து சென்ற உத்தியோக மொழி உதவிக் கமிஷனர் சௌக்கிய சேவை அத்தியட்சகர் காரியாலயத்துக்கு விஜயம்செய்தபோது அத்தியட்சகருக்கும் சிங்கள குமாஸ்தாக்களுக்குமிடையே சமரச உடன்பாடு செய்திருந்தார். அந்த உடன்பாட்டின்படி சிங்கள குமாஸ்தாக்கள் அத்தியட்சகருக்கு அனுப்பும் கடிதங்களுடன் ஆங்கிலமொழிபெயர்பு இருக்க வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டது. சிங்கள குமாஸ்தாக்களும் இதற்குச் சம்மதம் அளித்திருந்தார்கள்.

இதனை நினைவுபடுத்தி அத்தியட்சகர் ஆங்கில மொழிபெயர்ப்புபற்றிக் கோரியதைத் தொடர்ந்தே இக்குமாஸ்தாக்கள் வெளியேறியதாகத் தெரிகிறது.

## "குமாஸ்தாக்கள் செயல் பற்றி விசாரணை. செய்க"

### சுகாதார அமைச்சருக்கு தொழிற்சங்கங்கள் தந்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை அத்தியட்சகர் காரியாலயத்தை விட்டு நேற்றுக் காலை வெளியேறிய சிங்களக் குமாஸ்தாக்களின் நடத்தை குறித்து நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், அகில இலங்கை சுகாதார இலாகா தொழிற்சங்கம் ஆகியன பிரதமரையும் சுகாதார அமைச்சரையும் சுகாதார அதிபரையும் கோரியுள்ளன.

அரசாங்க தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனமும் அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கமும் இவர்களுக்கு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை அத்தியட்சகர் காரியாலயத்தில் கடமையாற்றி வரும் சிங்கள குமாஸ்தாக்களின் வெளியேற்றம் அமைதியாக நிர்வாகம் நடைபெறும் அரசாங்க அலுவலகத்தின் பரிபாலன விதிக்கு மாருக இருக்கிறது. இவர்கள் அனுமதியின்றி வெளியேறியது சம்பந்தமாக இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த குமாஸ்தாக்கள் இவ்வித நடவடிக்கையால் தெற்கே இருக்கும் சிங்கள வகுப்புவாதிகளுக்கு அரசியல் பிரசாரத்துக்கு இடமளிப்பதாக இருக்கும். இதன் மூலம் அமைதி கெட்டுவிடும். சிங்கள குமாஸ்தாக்களின் வெளியேற்றம் உண்மைக்கு நேர்மாறான செயல் என்பதைத் தெரிவிக்கின்றோம்.

தொழிற்சங்கங்கள் கூடும்

இவ்வித செயலால் இங்கு எழுந்துள்ள சூழ்நிலையை ஆராய்ந்து நடவடிக்கையெடுப்பதற்கென நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள சகல தொழிற்சங்கங்களும் கூடவிருக்கின்றன.

## புறக்கோட்டையில் பெரும் தீவிபத்து

கொழும்பு, வியாழன்

கொழும்பு புறக்கோட்டையில் காஸ்வர்க் வீதியில் நேற்றிரவு ஒரு கடையில் பெருந் தீவிபத்து ஏற்பட்டது. பெரும் சேதமேற்பட்டதாகவும் அஞ்சப்படுகிறது. பலமணி நேரம் தீயணைப்புப் படையினர் போராடி தீயை அணைத்தனர்.

## சம்பளம்பெற மாட்டார்கள்!

கொழும்பு, வியாழன்

நிலஅளவைப்பகுதி இலாகாவிலுள்ள தமிழ் அரசாங்க ஊழியர் சம்பளப் பட்டியலில் தங்கள் பெயரும் சிங்களத்தில் பதியப்பட்டிருந்தால் இம்மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதில்லையென்று தீர்மானித்திருக்கிருர்கள் என அறிவிக்கப்படுகிறது.

இத்துடன் இந்த இலாகாவில் சிலதினங்களாக சிலசம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும் இதுபற்றி நிலஅளவைப்பகுதி அதிகாரியிடம் முறையிட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## வேலை நிறுத்தம் முடிவடைந்தது

பண்டாரவளை, வியாழன்

பூனுகலை பிரிவில் கடந்த 45 நாட்களாக தொடர்ந்து நடைபெற்று வந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. இவ்வேலைநிறுத்தத்தில் 2340 தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தார்கள். தற்பொழுது எல்லாத் தொழிலாளர்களும் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

## ராஜீயஉறவை துண்டிக்க முடிவு

சைகோன், ஜன. 23

நவசீனவை அங்கீகரிப்பதென்று பிரான்ஸ் தீர்மானித்திருப்பதால் பிரான்சுடனுள்ள ராஜீய உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்று தென்வியட்னும் ஆட்சி அதிகாரசபை அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

மலேசியப் பிரச்னை

## வெளிவிவகார மந்திரிகள் கூடிப் பேச இணக்கம்

### எல்லைச் சண்டையும் நிறுத்தப்படும்

ஜாகர்த்தா, ஜன. 23

மலேசியப் பிரச்னை குறித்து உடன்பாடு காணும் முயற்சியாக இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார மந்திரிகளும் விரைவில் சந்தித்துப் பேசுவதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளதாக, தென் கிழக்காசியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய அமெரிக்க ஜனாதிபதியின் விசேஷ தூதர் திரு. ரொபர்ட் கென்னடி இன்று தெரிவித்தார்.

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணேவை இரண்டாவது தடவையாகவும் சந்தித்துப் பேசியபின் திரு. ரொபர்ட் கென்னடி இத்தகவலை நிருபர்கள் மகாநாடொன்றில் அறிவித்தார்.

வெளிவிவகார மந்திரிகள் மகாநாடு, மூன்று நாடுகளின் தலைவர்களையும் கொண்ட உச்சி மகாநாட்டுக்கு வழி வகுக்கும் என்று தாம் நம்புவதாகவும் விரைவில் உச்சி மகாநாடு நடைபெறுமென்று நம்புவதாகவும் திரு. ரொபர்ட் தெரிவித்தார்.

போர்னியோ இந்தோனேஷிய எல்லையில் பகை நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளவும் இரு தரப்பினரும் இணக்கம் கொண்டுள்ளதாகவும் திரு. ரொபர்ட் கென்னடி கூறினர்.

நிருபர்கள் மகாநாட்டில் கலந்துகொண்ட இந்தோனேஷிய வெளிவிவகாரமந்திரி டாக்டர் சுபந்திரியோ இந்தோனேஷியா அதிபர் சார்பில் ஒரு அறிக்கையை வாசித்தார்.

உச்சி மகாநாட்டில் மலேசிய அங்கீகாரம் தான் முக்கிய பிரச்னையாக விளங்கும் என்று அவர் அதில் தெரிவித்திருந்தார்.

போர்னியோ எல்லையில் பகை நடவடிக்கைகள் ஒரு வார காலத்துக்குள் நிறுத்தப்படுமென டாக்டர் சுபந்திரியோ ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"நாடற்றவர்களை இந்தியரர்கப் பதியுமாறு

## நேருவிடம் கேட்க என்னஉரிமைஉண்டு?"

### செனட்டில் நடேசன் கேள்வி

கொழும்பு, வியாழன்

'சமாதானத்துக்கு வழிவகுக்கும் அணு ஆயுதத்தடை ஒப்பந்தத்தை இந்தியாவும் இலங்கையும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனல் சீனவோ இந்த ஒப்பந்தம் ஒரு மோசடியான ஒப்பந்தம் எனக்கூறுகிறது'

இவ்வாறு செனட்டர் எஸ். நடேசன் நேற்று செனட்சபையில் வெளிவிவகாரக்கொள்கை மீது நம்பிக்கையில்லையென செனட்டர் வெர்ணன் திஸநாயகா கொண்டுவந்த பிரேரணை மீது தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

செனட்டர் நடேசன் மேலும் பேசுகையில் நாட்டின் நலனுக்கு நடுநிலைமைக் கொள்கைதான் நல்லதென அரசாங்கம்

(2-ம் பக்கம் பார்க்க)

## மணி வாக்கு

சத்தியத்தை அடைவதற்கான சாதனங்கள் எப்படிக் கஷ்டமானவையோ, அப்படி எளிமையானவையாகவும் இருக்கின்றன. இறுமாப்பைக் கொண்ட ஒருவனுக்கு அவை முற்றும் சாத்தியமில்லாதவையாகத் தோன்றலாம். ஆனுல் கபடமற்ற ஒரு குழந்தைக்கு அவை சாத்தியமானவை.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU
EELANADU, National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு
தை மீ 11 உ (24-1-64)

## முக்கிய கடமை

கொழும்பிலுள்ள அரசாங்க காரியாலயங்கள் சிலவற்றில் அசம்பாவிதமான சம்பவங்கள் நடைபெறுவதாகவும் முன்பு சகோதரர் போல் ஐக்கியமாக இருந்த ஊழியர்களுக்கிடையில் இன்றுவேற்றுமையும் விரோதமும் வளர்ந்து நிம்மதியாக அவர்கள் வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் கிடைக்கின்றன. இதில் ஓரளவு உண்மையிருப்பினும் இவ்விஷயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கம் உள்ளிட்டு சகலரினதும் தலையாய கடமையாகும்.

உத்தியோக மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவதென்று அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்து இவ்வருடம் முதல் திகதியிலிருந்து அரசாங்க காரியாலயங்களில் அலுவல்கள் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அவ்விதமே நடைபெற்று வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. சிங்களத்தில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் தமது கடமையை நிறைவேற்ற வேண்டியவர்கள் என்பதில் ஆட்சேபம் இருக்க முடியாது. சிங்களத்தில் தேர்ச்சி பெறுமலும் வேலையிலிருந்து ஓய்வுபெறுமலுமுள்ள அரசாங்க ஊழியர்கள் இன்னமும் சேவையிலுள்ளனர். அவர்களை அரசாங்கம் கட்டாயமாக ஓய்வு பெறும்படியோ வேலையிலிருந்து நீக்கவோ இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களுக்கு மேலும் இரண்டுவருட அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஊழியர் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு.

இதைவிடுத்து சிங்களத்தில் கருமமாற்ற முடியாத ஊழியர் மீது இதர அரசாங்க ஊழியர் கீழ்த்தரமான முறையில் நடந்து கொள்வதானுல் அது அரசாங்க இலாகாக்களில் நிம்மதியாக வேலைகள் நடைபெறுவதையோ ஊழியர் அமைதியாகக் காரியம் பார்ப்பதையோ ஏற்படுத்தமாட்டாது. ஒருஇடத்தில் சிறிதாக ஆரம்பிக்கும் சம்பவங்கள் இதர இடங்களுக்கும் பரவி பெரிதாக வளர்ந்துவிடுமென்பது கடந்தகால சம்பவங்கள் நமக்குப் போதிக்கும் பாடம். ஒற்றுமையை வளர்க்க வேண்டிய தொழிற்சங்கங்கள் ஒற்றுமையை ஏற்படுத்த முடியாவிடினும் வேற்றுமையையாவது வளர்க்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதுவிஷயத்தில் அரசாங்க இலாகாத் தலைவர்கள் "எமக்கென்ன" என்றிராமல் உரிய சமயத்தில் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு இவ்விஷயங்களைக் கொண்டு வந்து ஊழியர்களுக்குள் சௌஜன்ய உறவை ஏற்படுத்த வேண்டியது அவர்களுடைய கடமையும் பொறுப்புமாகும்.

நாட்டின் முன்னேற்றத்துக்காகச் சகல சமூகத் தலைவர்களும் ஐக்கியமாக உழைக்க வேண்டியது அவசியம் என்று நிதிமந்திரி இலங்கரத்ன சென்ற செவ்வாய்க்கிழமை இலங்கை வங்கி சிங்கள இலக்கிய சங்க ஆண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான இடம் வழங்கப்படுமென்றும் அவர் அங்கு குறிப்பிட்டிருக்கிருர். எனவே சில அரசாங்க இலாகாக்களில் தமிழ்பேசும் ஊழியர்களுக்கு எதிராக மற்றும் சில அரசாங்க ஊழியர் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வதை நிதிமந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவ வேண்டியது சம்பந்தப்பட்டவர்கள் அனைவரினதும் கடமையாகும். இது போன்ற சம்பவங்களை முளையிலேயே கிள்ளியெறிந்து அரசாங்க இலாகாக்களில் மட்டுமல்ல நாட்டிலும் அமைதியை ஏற்படுத்தவேண்டியது நிதிமந்திரியினதும், அரசாங்கத்தினதும் முதற் கடமையாகும். ஒற்றுமையின் அவசியத்தை முன்னெப்பொழுதையும் விட இன்று நன்ருக உணர்ந்துள்ள நிதிமந்திரியும், அரசாங்கமும் இவ்விஷயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்துமென்றே நம்புகிறோம்.

## 'சண்' நடவடிக்கை பற்றிக் கண்டனம்

கொழும்பு, வியாழன்

'இந்த நாட்டிலுள்ள இடதுசாரி சக்திகள் ஒன்ருகவேண்டும் என மக்கள் கொண்டிருந்த ஆவல் 25 வருடங்களுக்குப் பின் நிறைவேறியுள்ளது' என இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் கொழும்பு மாவட்டக் கமிட்டி இரு நாட்கள் நடத்திய மகாநாட்டின் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இடதுசாரி ஐக்கியமுன்னணி உருவாகுவதை எமது கட்சியிலுள்ள ஒரு சிறிய குதியினர் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்துள்ளார்கள். திரு. சண்முகதாசன் தலைமையில் இயங்கிய இக்கோஷ்டி இடதுசாரி ஐக்கிய முன்னணியின் நடவடிக்கைகளைக் குலைக்க முற்பட்டதால் எமது கட்சியிலிருந்து இவர்களை விலக்கவேண்டியிருந்தது."

இடதுசாரி முன்னணியைப் பிளவுபடுத்த முயற்சிக்கும் சண்முகதாசன் கோஷ்டியை எதிர்த்து நிற்குமாறு கமிட்டி கொழும்பிலுள்ள சகல தொழிலாளருக்கும் மற்ற முற்போக்கு சக்திகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்புக் கடிதம்

# சிங்கள அமுலில் தீவிரமாக இருப்பவர்கள் தமிழர்களாம்!

## அடுத்த சபாநாயகர் ஹியூ: அபூர்வ சகோதரர்கள் சச்சரவு

— கொழும்பு நிருபர் —

தனிச்சிங்கள அமுல் அநேக இலாகாக்களில் அவ்வளவு மும்முரமாக நடைபெறுவதாகத் தெரியவில்லை. இதற்கு அநேக காரணங்கள் கூறப்படுகின்றன.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக நழுவிக் கொண்டுபோகும் அரசாங்கக் கட்சியின் மெஜாரிட்டி தனிச் சிங்கள அமுலின் இந்தப் போக்குக்கு அடிப்படைக் காரணமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. வட, கிழக்கு மாகாணங்கள் தான் எப்படிபபோய் விட்டாலும்நாட்டின் இதரபகுதிகளிலுள்ள தமிழர்களின் ஆதரவு இருக்க வேண்டு மென்பதற்காக ஒருவேளை ஏதும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை பிறந்திருக்கிறதோ தெரியாது.

"உயிர் நாடி வாக்குகள்" என்று சென்ற தேர்தல் காலத்தில் வர்ணிக்கப்பட்ட மலைநாட்டுப் பகுதிகளிலுள்ள தமிழர்களுடைய வாககுகள் இனி வரும் பொதுத் தேர்தலிலும் கூட முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப்போகிறது. சென்ற தேர்தலில் 126 வாக்குகளால் வெற்றி பெற்ற நிதிமந்திரி திரு. ரி. பி. இலங்கரத்னகூட இப்படியான "உயிர் நாடி" வாக்குகளால்தான் காப்பாற்றப்பட்டார் என்று சுட்டிக் காட்டுபவர்கள் இதே போல இன்னும் 12 தொகுதிகளிலும் நடந்ததென்கிருர்கள். இதனுல் தேர்தல் வரையிலாவது தனிச் சிங்கள அமுலில் கெடுபிடிப்போர் நடத்தாமலிருந்துவிடக் கூடுமென்று கருதுகிருர்கள்.

ஒப்பந்தங்களையும், வாக்குறுதிகளையும் காற்ருடிகளாக மதிக்கும் அரசாங்கம் எந்த இடத்தில் எதை, எப்படிச் செய்யும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலையும் அவதானிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது

இது ஒருபுறமிருக்க தனிச் சிங்கள அமுலைப்பற்றியும், தமிழர்களைப் பற்றியும் அடிபடும் பேச்சுக்களுக்கு இங்கு குறைவில்லை. சிங்கள அமுலில் தீவிரமாக இருப்பவர்கள் சிங்களவர்களல்ல, தமிழர்கள் தானும்! காவோலைப் பருவத்திலுள்ள, 'வட்டுக்கோட்டைக்கு வழி எது என்ருல்' உடனே துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு' என்று கூறக்கூடிய சிங்கள அறிவுள்ள தமிழர்கள் தான் பிரச்னையைப் பெரிதாக்கிக் கொண்டிருக்கிருர்கள் என்பதற்கு அநேக'கதை'கள் சொல்லப்படுகின்றன.

ரயில்வே பகுதியின் ஒரு பிரிவில் தமிழர்களின் சிங்கள அமர்க்களம் தானும். தனிச் சிங்கள அமுல் தொடங்கிய தை மாதத்திற்குப் பின்னரும் இங்கு இருந்த சிங்கள அதிகாரி ஒருவர் முந்தியுள்ள முறையை அனுஷ்டித்து வந்தாராம் அவர் திடீரென மாற்றஞ் செய்யப்பட்டு அந்த இடதது்க்கு தமிழர் ஒருவர் வந்து சேர்ந்ததும் ஒரே சிங்களக் கெடுபிடி தானும். தாராளமான பென்ஷனுடன் கடைசிக் காலத்துக்கான யாத்திரையை ஆரம்பிக்க விருக்கும் 'காவோலைகள்' இப்படி நடந்தால் 'குருத்தோலைகள்' என்ன செய்ய முடியும் என்று கேட்கும் அரசாங்க குமாஸ்தாக்களுடைய தொகை அதிகரித்திருக்கிறது.

இனி இது ஒருபுறமிருக்க தமிழர்களுடைய சிங்களக் குறிப்புகளைப் பார்ப்பவர்கள் ஏதோ சந்திரபாபு—தங்கவேலுவை நேரில் சந்தித்தவர்கள் மாதிரி குலுங்கக் குலுங்க சிரிக்கிருர்கள்.

சின்னையா என்பவர் சிங்களத்தில் 'செந்நாய்' ஆகிவிடுகிருராம். கணபதிப்பிள்ளையும் கனபரியிளாய் ஆகிவிடுகிருர் கனகசபை என்பவர் இப்போது கபேய் என்று ஆகிவிடுருர்.

இன்னும் ஒரு உதாரணம். அரசாங்க இலாகா ஒன்றில் தமிழர் ஒருவரின் கீழ் வேலை செய்யும் சிங்களவர் ஒருவர் ஆங்கிலத்தில் தமக்கு சுகவீனமாக இருப்பதாகவும் லீவு வேண்டுமெனவும் கேட்டிருந்தாராம். உடனே அக்கடிதத்தில் சிங்களத்தில் குறிப்பெழுதிய தமிழர் 'போம கொந்தாய் (மிச்சம் நல்லது) என்று குறிப்பெழுதியிருந்தாராம்!

### அடுத்த சபாநாயகர் ஹியூ பர்ணுந்து

பெல்பொலை போனுல் அவருடைய இடத்துக்கு யாரைத் தெரிவு செய்வதென்பதில் ஏற்பட்டிருக்கும் சச்சரவும், கோஷ்டிச் சண்டையும் தான் பெல்பொலையை இதுவரை காலமும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கச் செய்தது.

உப-சபாநாயகரைச் சபாநாயகராக்குவதில் பல பிரச்னைகள் அரசாங்கத்துக்கு எழுந்தன. ஒன்று, உப-சபாநாயகர் திரு. ஹியூ பெர்ணுண்டோ ஒரு கத்தோலிக்கர். கத்தோலிக்கருக்கு எதிராக பௌத்தர்கள் போர் தொடங்கியிருக்கும் இக்காலத்தில் அவரை நியமித்தால் எண்திசைகளிலும் இருந்து பாணங்கள் வருமென்பது. இரண்டு இதைவிட ஹியூ கட்சிக்குள் இருந்தபடியே அரசாங்கத்தைக் காரசாரமாகத் தாக்கிவருபவர். இடதுசாரிக் கொள்கைகளுக்கு மதிப்பளிப்பவர். பிரதமரின் வலக்கையான பீலிக்ஸை பகிரங்கமாகப் பார்லிமெண்டில் தாக்கிப் பேசியவர்.

இவ்வளவு நற்சாட்சிப் பத்திரங்களைப் பெற்றுள்ள ஹியூவை எப்படி நியமிப்பதென்பதே பிரதமருக்குப் பிரச்னையாக இருந்துவந்ததாகக் கூறப்படுகிறது. ஆனுல் இப்போது இந்த நிலை மாறிவிட்டதாம். பிரதமருக்கும், ஹியூவுக்கும் இடையில் நன்நம்பிக்கை பிறந்திருக்கிறதாம். இதனுல் அடுத்த சபாநாயகர் ஹியூவாகத்தான் இருக்குமென்பது ஓரளவுக்கு உறுதியாகிவிட்டதாகப் பாராளுமன்ற வட்டாரங்கள் நம்புகின்றன.

### பிலிப் ரூபர்ட் அபூர்வ சகோதரர்கள்

என் எம்.மின் சமசமாஜக்கட்சியிலிருந்து சகோதரர் பிலிப்பின் கொட்டத்தை அடக்கிவந்து, பின்னர் அதே சகோதரருடன் சேர்ந்து கொண்ட ரூபர்ட் இப்போது பெரும் சங்கடமான நிலைக்குள் சிக்கிக்கொண்டிருக்கிருரென்று கூறப்படுகிறது.

இவருக்கும் பிலிப்புக்குமிடையில் மனக்கசப்பு வளர்ந்து வருவதாகவும் சமீபத்தில் பகிரங்கப்பட்டுவிடும் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசசடிபடுகின்றன

துறைமுகத்தில் வர்த்தகச் சிப்பந்திகள் சம்மேளனம் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தில் பிலிப் நிதான புத்தியுடன் நடந்துகொள்ளவில்லை என்று ரூபர்ட் குற்றஞ்சாட்டி வருகிருராம்.

சகோதரரின் எம். ஈ. பி.யிலிருந்து விலகினுல் ரூபர்ட்டுக்கு வேறுகதி என்னவென்றும் மறுபடியும் சமசமாஜியாகத்தான் போகிருரா என்றும் கேள்விகள் எழுகின்றன

மற்றொரு சமசமாஜியான பலா தம்பு (வர்த்தக சிப்பந்திகள் சங்கக் காரியதரிசி) வும் பிலிப்பைச் சென்ற வாரம் காரசாரமாகத் தாக்கிப் பேசினுர். இதனுல் ஐக்கிய முன்னணியில் என்னவும் நடந்துவிடுமோ என்றும் சிலர் அஞ்சுகிருர்கள்.

## தொழிலாளர் வேலைநிறுத்தம்

நுவரேலியா, வியாழன்

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ ஆகியவற்றைச் சேர்ந்த 265 அங்கத்தவர்கள், அக்ரபத்தனையிலுள்ள தோட்டத்தில் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். கொந்தருத்து சம்பந்தமாகவே இவ் வேலைநிறுத்தம் நடைபெற்றுவருகிறது.

இவ் வேலைநிறுத்தம் விரைவில் தீர்க்கப்படாவிட்டால் மேலும் 3000 தொழிலாளர்கள் இவ் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்களென்று யூனியனை சேர்ந்த ஒருவர் கூறினுர்.

## நேருவிடம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருதக்கூடுமென்றும் அந்தக் கொள்கையையே அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கூறினுர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மதம், மொழி, கலாசாரம் ஆகிய தொடர்புகள் ஆதிகாலம் தொடக்கம் இருப்பதாகவும் செனட்டர் நடேசன் கூறினுர்.

"சில வேறுபாடுகள் இடையிடையே ஏற்பட்டதைத் தவிர இந்தியாவுக்கும் சீனுவுக்கும் எப்பொழுதும் நட்புறவு இருந்து வந்துள்ளது. எல்லைப் பிரச்னையை பலாத்காரத்தின் மூலம் தீர்த்துக் கொள்வதற்கு சீனு முயற்சி செய்தது. இந்தியாவுக்கு கவலையும் ஆத்திரமும் ஏற்பட்டது இயல்பே. இந்தியாதான் ஆக்கிரமிப்பாளர் என்று சீனு கூறுகிறது தான். சோவியத்யூனியனுடன் கூட சீனுவுக்கு எல்லைத் தகராறு இருக்கிறது.

### இலங்கை இந்தியர் பிரச்னை

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னைபற்றி செனட்டர் நடேசன் குறிப்பிடுகையில் கூறியதாவது:

இலங்கையின் பிரஜாவுரிமைச் சட்டங்களினுல் 'நாடற்றவர்'களாக்கப்பட்டவர்களை, இந்தியப் பிரஜைகளாகப் பதிவுசெய்யும்படி நேருவைக் கேட்டுக் கொள்வதற்கு இலங்கைக்குத் தார்மீகரீதியாகவோ சட்டரீதியாகவோ என்ன உரிமை இருக்கிறது? இப்பிரச்னையைத் தீர்ப்பதில் நல்லிதயத்தினுல் உதவி புரிய முன்வந்துள்ள நேருவை, அவர் உதவிசெய்ய முன்வந்ததற்காக வற்புறுத்தலாமா?"

செனட்டர் எம். பி டி. சொய்சா பேசுகையில் எந்த வல்லரசு முகாமுடனும் இலங்கை சேரமாட்டாதென்றும் கூறினுர்.

செனட்டர் சந்திரா குணசேகரா பேசுகையில் அமெரிக்காவின் ஏழாவது கடற்படைஅணி இந்து மகாசமுத்திரத்துக்கு வருவதை பிரதமர் ஆட்சேபிக்காதது வருத்தமளிக்கிறதென்ருர்.

## பாலா தம்புவுக்கு ஏகசிராக்கி

துறைமுக ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை 70 நாட்கள் நடத்தி வெற்றிகண்ட பாலா தம்புவுக்கு இப்போது41வயது தானுகிறது. கம்பெனி ஒன்றில் ஆரம்பத்தில் வேலைக்கமர்ந்த தம்பு சமசமாஜிகள் நடாத்திய வேலைநிறுத்தமொன்றில் குதித்து அதனுல் வேலையையும் இழந்தவர். இப்போது பெரிய வேலைநிறுத்தம் ஒன்றையே நடாத்தி, பெரும் வெற்றியும் பெற்றுள்ளார்.

காலையில் கண்விழிக்கும் நேரத்திலிருந்து இரவில் கண் மூடித் தூங்கும்வரையில் தொண்டை காயாமல் பேசக்கூடிய திறமை இவருக்கு உண்டு. இவ்வளவு பெரிய போராட்டத்தை வெல்ல இத் திறமையே அவருக்கு உதவியது.

# லால்பகதூர் மீண்டும் மந்திரியானர்

## "கலகத்தில் ஆயிரம் பேர் மாண்டது என்பது அபத்தம்"

### கி. பாகிஸ்தான் அரசாங்கம் மறுப்பு

டாக்கா, ஜன. 22

கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெற்ற வகுப்புக் கலகங்களில் குறைந்தது ஆயிரம் பேராவது மாண்டிருக்கலாமென வெளிவந்த செய்திக்கு கிழக்குப் பாகிஸ்தான் அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது. "இந்தச் செய்தி ஆதாரமற்றது; அபத்தமானது" என்று கிழக்கு பாகிஸ்தான் அரசாங்கம் ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட வகுப்புக் கலகங்களை அடக்குவதற்கு அரசாங்கம் எடுத்த உறுதியான நடவடிக்கைகள் காரணமாக அங்கு மாமூல் நிலைமை ஏற்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

டாக்கா வைத்தியக் கல்லூரி ஆஸ்பத்திரியில்மட்டும் 600பேர் மாண்டதாக வெளிவந்த செய்தியை மறுத்துள்ள அந்த அறிக்கை வைத்தியக்கல்லூரி ஆஸ்பத்திரியில் காயமடைந்தவர் 508 பேர் அனுமதிக்கப்பட்டதாகவும் இவர்களில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளித்ததால் காடையர்களால் தாக்குதலுக்குள்ளான பெரும்பான்மைச் சமூகத்தவர்களைச் சேர்ந்தவர்களுமுள்ளனரென்றும் இங்கு எவரும்மரணமடையவில்லையென்றும் கூறுகிறது.

கிராமங்கள், வீடுகள், கடைகள் தீவைக்கப்பட்டதுபற்றி அறிக்கை குறிப்பிடுகையில் ஆக சிலஇடங்களில் மட்டுமே தீவைப்பு சம்பவங்கள் நடைபெற்றதாகக் குறிப்பிடுகிறது.

கத்திக்குத்து சம்பவங்கள் எந்த இடத்திலும் நடைபெறவில்லையென்றும அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது.

வகுப்புக் கலகங்களிலும் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகங்களிலும் மாண்டவர் தொகை 150க்கு மேலில்லை என்றும் அறிக்கை கூறுகிறது.

டாக்காவிலுள்ள இந்திய உதவி ஹைகமிஷனர் காயமடைந்தாரென்றும் டாக்கா நீதிமன்றத்திலுள்ள பிரபல வழக்கறிஞர் பி. எல். டே கொல்லப்பட்டாரென்றும் வெளிவந்த செய்திகளையும் அரசாங்கம் தனது அறிக்கையில் மறுத்துள்ளதுடன் இருவரும் சுகமாக இருக்கின்றனர் என்றும் தெரிவித்துள்ளது.

## உதவிப் பிரதமராகலாம் எனடில்லியில் ஹேஸ்யம்

### சஞ்சீவையா தொழில்மந்திரி

புதுடில்லி, ஜன. 23

**திரு. லால்பகதூர் சாஸ்திரி மீண்டும் இந்திய மத்திய மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறர். அவர் இலாகா இல்லாதமந்திரியாகநியமிக்கப்பட்டுள்ளார். முன்னுள் ஆந்திரப் பிரதேச முதன் மந்திரி திரு. டி. சஞ்சீவையாவும் மத்திய மந்திரி சபையில் தொழில் மந்திரியாகப் பதவியேற்றுக் கொள்ளவிருக்கிறர்.**

இந்திய மத்திய மந்திரி சபையில் உள்விவகார மந்திரியாக இருந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி காமராஜ் திட்டத்தின் கீழ் தமது பதவியை ராஜினமாச் செய்திருந்தார். திரு.நேருஉடல்நலம்குன்றியதாலும் தொடர்ந்தும் முன்புபோல் அதிக பொறுப்புக்களை ஏற்றுப் பலமணி நேரம் வேலை செய்யக்கூடாதெனடாக்டர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளதாலும் நேருவின் பொறுப்புக்களைக் குறைப்பதற்காக மந்திரி சபையில் இப்பொழுது மாறுதல் செய்யப்படுகிறது.

**உதவிப் பிரதமர் ஆவார்?**

திரு. சாஸ்திரி இலாகாப் பொறுப்பற்ற மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள போதிலும் லோகசபையில் அரசாங்கக் கட்சி தலைவராகவும் உதவிப் பிரதமராகவும் நியமிக்கப்படுவாரென அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. நிதி மந்திரி திரு.டி. டி.கிருஷ்ணமாச்சாரி, உள்நாட்டு மந்திரி திரு. ஜி. எல். நந்தா, திரு. சாஸ்திரி ஆகியோருடனும் காங்கிரஸ் அக்கிராசனர் திரு. கே. காமராஜுடனும் திரு. நேரு ஆலோசனை நடத்திய பின்னரே திரு. சாஸ்திரி மீண்டும் மந்திரிசபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. வல்லபாய்பட்டேல் உதவிப் பிரதமராகப் பதவி வகித்தபின் இந்திய மந்திரி சபையில் இதுவரை எவரும் உதவிப் பிரதம மந்திரியாகப் பதவி வகித்ததில்லை. திரு. கோவிந்த வல்லபபந்த் உதவிப் பிரதமராக நியமிக்படவிருந்த சமயத்தில் காங்கிரஸ் கட்சி எம். பி. க்களுக்குள் கருத்துவேறுபாடு ஏற்பட்டதும் உதவிப்பிரதமராக எவரையும் நியமிக்கும் உத்தேசத்தை திரு. நேரு கைவிட்டார்.

**சஞ்சீவையா நியமனம்**

தொழில் மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. சஞ்சீவையா சமீப காலம் வரை ஆந்திரப் பிரதேச முதல் மந்திரியாகப் பதவி வகித்தவர். இதற்கு முன் காங்கிரஸ் அக்கிராசனராகவும் அதற்கு முன் ஆந்திரப்பிரதேச மந்திரி சபையில் மந்திரியாகவும் பதவி வகித்தவர், ஆந்திரா தனி ராஜயமாகப் பிரிவதற்கு முன் சென்னை ராஜய மந்திரி சபையிலும் திரு. சஞ்சீவையா மந்திரியாகப் பதவி வகித்திருக்கிறர்.

## எகிப்தில் ஓய்வு எடுக்க அழைப்பு

### நேருவுக்கு நாஸர் செய்தி

கெய்ரோ, ஜன. 23

எகிப்துக்கு வந்து ஓய்வு எடுக்குமாறு ஐக்கிய அராபியக் குடியரசு ஜனதிபதி நாஸர், பிரதமர் நேருவுக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறர். பிரதமர் நேரு விரைவில் குணமடைந்து அவரது லட்சியத்துக்காகத் தொடர்ந்து பாடுபட வேண்டுமெனப் பிரார்த்திப்பதாயும் அவர் கூறியிருக்கிறர்.

ஜோர்டான் மன்னர் ஹுஸெய்ன் அனுப்பியுள்ள செய்தியில், திரு. நேருவின் உடல்நிலை விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாய்க கூறியிருக்கிறர்.

திரு. நேருவுக்கு இப்போது உத்தியோகபூர்வமான தஸ்தாவேஜுகள் அனுப்பப்படுவதாயும், அலுவல்களை ஓரளவு அவர் கவனிப்பதாயும், இன்று மந்திரி திரு. டி. கிருஷ்ணமாச்சாரி, திரு. லால்பகதூர்சாஸ்திரி உள்ளிட்டுப் பலரை அவர் சந்தித்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

## நந்தா எதிர்ப்பு

ஆமதாபாத், ஜன. 23

'காமராஜ் திட்டத்'தின் கீழ் பதவியிலிருந்து விலகிய மந்திரிகளை மீண்டும் சேர்த்துக் கொள்ளும் யோசனையை திரு. எஸ். கே. பட்டீல் எதிர்த்தார். மத்திய மந்திரி சபையில் தாம் மீண்டும் சேரத் தயாராயில்லையென்றும் திரு. லால்பகதூர் சாஸ்திரியை மீண்டும் மந்திரிசபையில் சேர்த்துக் கொள்வது பற்றி அறிவிப்பு வந்தால் தாம் ஆச்சரியப்படப் போவதில்லையென்றும் திரு. பட்டீல் கூறினர்.

## "சுகர்ணேவுடன் பொது உடன்பாடு ஏற்பட்டுள்ளது"

### மலேசியாப் பிரச்னைபற்றி திரு. ரொபர்ட் கென்னடி தகவல்

ஜாகர்த்தா, ஜன. 23

மலேசியாப் பிரச்னையில் இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணேவுடன் பொதுவான உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக அமெரிக்க ஜனதிபதியின் விசேஷதூதர் திரு. ரொபர்ட் கென்னடி இங்கு தெரிவித்தார்.

இவ்வாரத்துக்குள் இரண்டாவது தடவையாக டாக்டர் சுகர்ணேவை நேற்று சந்தித்துப் பேசிய திரு. ரொபர்ட் கென்னடி இதற்குமுன் மணிலாவில் பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. மக்கபகலையும் கோலாலம்பூரில் மலேசியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானையும் சந்தித்து மலேசியத் தகராறுக்கு சமாதானமாகத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டார்.

ஜாகர்த்தாவிலிருந்து புறப்படுமுன் தமது முயற்சிபற்றி விரிவான ஒரு அறிக்கை வெளியிடப் போவதாகவும் அவர் சொன்னர். கோலாலம்பூர், மணிலா பேச்சுவார்த்தைபற்றி டாக்டர் சுகர்ணேவிடம் தெரிவித்தாகவும் திரு. ரொபர்ட் கென்னடி கூறினர்.

மலேசியாப் பிரச்னை சமாதானமாகத் தீருமென்ற நம்பிக்கை முன்னிருந்ததைவிட இப்போது தமக்கு அதிகமிருப்பதாக பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. மக்கபகல் மணிலாவில் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

விரைவில் உச்சிமகாநாடு ஒன்று நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம் நிபந்தனையெதுவுமின்றி மலேசியாப் பிரதமருக்கும் பிலிப்பைன்ஸ் அதிபருக்குமிடையில் விரைவில் மகாநாடு ஒன்று நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது பற்றி இரு தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திவரும் கம்போடிய தலைவர் இளவரசர் நரோடம்சிகானுக் மணிலா வந்துள்ளார்.

## ஆங்கிலம் நீடிக்கும்

### — பக்தவத்சலம்

சென்னை, ஜன. 22

ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கப்படும் என முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் சட்டசபையில் உறுதியளித்தார்.

ஹிந்தியை கற்கும் படியான கட்டாயம் இப்போது இல்லை என்றும், மத்திய அரசாங்க உத்தியோகத்தில் சேருவதற்கு ஹிந்தி கற்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாதென்றும், ஆனல் வேலையில் சேர்ந்தபின் ஹிந்தியை கற்கவேண்டுமெனக் கூறுவதில் தவறு எதுவுமில்லை எனறும் அவர் கூறினர்.

உத்தியோக மொழியாக ஆங்கிலம் எப்போதுமே இருபபது கூடாது என்றும் எமாம் மொழித் திட்டமே நல்லதென்றும் ஹிந்தி இஷ்டபாடமாக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினர்.

## இரண்டரைக் கோடி தொன் கியூபா சீனி

### ரஷ்யா வாங்கும்

மாஸ்கோ, ஜன 23

சோவியத் யூனியனும் கியூபாவும் செய்துகொண்ட நீண்டகால வர்த்தக ஒப்பந்தத்தின்படி 1965-ம் ஆண்டுக்கும் 1970-ம் ஆண்டுக்குமிடையில் இரண்டு கோடியே 40 லட்சம் தொன் சீனியை கியூபாவிடமிருந்து சோவியத் யூனியன் வாங்கும்.

## பாகிஸ்தான் ஈரான் மந்திரி

லாகூர், ஜன 23

ஈரான் வெளிவிவகாரமந்திரி நேற்று பாகிஸ்தான் வந்து சேர்ந்தார். பாகிஸ்தான் வெளிவிவகாரமந்திரி ஜனப் புட்டோவைச் சந்தித்துப் பேசியபின் ராவல்பிண்டிக்குச் சென்று அதிபர் அயூப்கானையும் சந்திப்ப

## 8 கோடி டன் ஒப்பந்தம்

புதுடில்லி, ஜன. 23

17 ஆண்டுகளில் இந்தியாவிடமிருந்து 8 கோடி டன் இரும்புக் கனிஜத்தைப் பெற ஜப்பான் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது.

## கனடாப் பிரதமர்

வாஷிங்டன், ஜன. 23

கனடாப்பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் தமது இரண்டு நாள் வாஷிங்டன் விஜயத்தை முடித்துக்கொண்டார்.

அமெரிக்காவுக்கும் பிரான்ஸுக்கும் இடையிலுள்ள கருத்துவேறுபாடுகள் விரைவில் நீங்கிவிடுமெனத் தாம் கருதுவதாக திரு. பியர்ஸன் நிருபர்களிடம் கூறினர்.

அமெரிக்கத் தலைவர்களுடன் தாம் பல பொதுவான விஷயங்கள் பற்றிப் பேசியதாக அவர் தெரிவித்தார்.

பிரான்ஸுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் சமரஸம் செய்துவருவதாக் கூறப்படுவதை அவர் மறுத்தார்.

## ஒக்டோபருக்குள் ரொடீஷியா குடியரசாகும்

### முதல் பிரதமர் கௌண்டா அறிவிப்ப

லண்டன், ஜன. 23

வடக்கு ரொடீஷியாவின் முதலாவது பிரதம மந்திரியாக ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு. கென்னத் கௌண்டா நேற்று பதவியேற்றுர். ரொடீஷியாவிற்கு உள்நாட்டு சுதந்திரம் அளிக்கும் புதிய அரசியல் திட்டத்தின் கீழ் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திரு. கௌண்டாவின் ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சிக்கு பெரும்பான்மையான ஸ்தானங்கள் கிடைத்தது.

முதலாவது பிரதமராகப் பதவியேற்றபின் நிருபர்களின் மகாநாட்டில் பேசுகையில், காமன்வெல்த்துக்குள் சுதந்திரக் குடியரசாக வடரொடீஷியா விளங்கவேண்டுமென்ற தனது கோரிக்கையை திரு. கௌண்டா மீண்டும் வலியுறுத்தினர்.

"இவ்வருடம் அக்டோபர் 24-ம் திகதி வடரொடீஷியா காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் சுதந்திர குடியரசு நாடாகும்" என்று அவர் அறிவித்தார்.

ஆபிரிக்கா அரசியல் பொருளாதார விடுதலையடையும் வரை தாமும் தமது அரசாங்கமும நிம்மதியடையமாட்டாதென்றும் திரு. கௌண்டா கூறினர்.

தமது அரசாங்கத்தை சட்ட விரோதமான முறையிலும் அரசியல் திட்டத்துக்குமாறான முறையிலும் கவிழ்க்க முயற்சி செய்தால் அவர்கள் ஈவிரக்கமின்றி நசுக்கட்படுவார்கள் என்றும் திரு. கௌண்டா எச்சரித்தார.

தங்களுக்கு தேர்தலில் சரியான சந்தர்ப்பமளிக்கப்படவில்லையென்றும் மீண்டும் புதிதாக ஒரு பொதுத்தேர்[illegible] நடத்தப்பட வேண்டுமெ[illegible] பிரிட்டனைக் கேட்கப்போ[illegible]தாகவும் எதிர்க்கட்சித்தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

## ஷேக்ஸ்பியர் ஞாபகார்த்த முத்திரைகள்

லண்டன், ஜன. 23

ஷேக்ஸ்பியரின் 400-வது ஆண்டு பிறந்த தினத்தைக் கொண்டாடுமுகமாக லண்டன் தபால் இலாகா ஏப்ரல் மாதம் 23-ந் திகதி ஷேக்ஸ்பியரின் உருவப் படம் பொறிக்கப்பட்ட ஐந்து தரப்பட்ட முத்திரை வெளியிடவிருக்கின்றது. ஷேக்ஸ்பியரின் உருவப் படம் பொறிக்கப்பட்ட இரு விமானத் தபாலட்டைகளும் வெளியிடப்படும்.

## ஆப்கன் தூதுக்குழு

ராவல்பிண்டி, ஜன. 23

மீண்டும் காபூலுடன் விமானப் போக்குவரத்துச் சேவைய ஆரம்பிப்பது சம்பந்தமாக பாகிஸ்தான் விமான சேவை ஸ்தாபனத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஆப்கானிஸ்தான் விமான சேவை ஸ்தாபனத்தைச் சேர்ந்த தூதுக்குழுவொன்று நேற்று பாகிஸ்தான் வந்து சேர்ந்தது.

ராவல்பிண்டி, ஜ[illegible]

பாகிஸ்தானிலுள்ள [illegible] சீனத்தூதர் நேற்று பாகி[illegible]தான் வெளிவிவகாரமந்திரி ஜனப் புட்டோவைச் சந்தித்துப் பேசினர். இருநாட்டுக்கும் பொதுவான விஷயங்கள் குறித்து இருவரும் ஆலோசனை செய்ததாகக் கூறப்படுகிறது.

# 6பேர் கொண்ட கமிட்டியை விவசாய மந்திரி நியமித்தார்

## விற்பனவு இலாகா கொள்வனவு பற்றி இக்கமிட்டி ஆராயும்

கொழும்பு, வியாழன்

விற்பனவு இலாகாவின் கொள்வனவுபற்றி அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு ஆறு பேர் கொண்ட ஒருகமிட்டியை உணவுவிவசாய மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நியமித்துள்ளார். இதன் காரணமாக வாடிக்கைக்காரர்களுக்கு நியாயமான விலையில் மரக்கறிகளும் மற்றும் பொருட்களும் விற்பனை செய்யப்படும்.

இதுசம்பந்தமாக அண்மையில் அமைச்சு உத்தியோகத்தர்கள, தலைமை இலாகா உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு மகாநாடு நடைபெற்றது.

மந்திரியால் நியமிக்கப்பட்ட கமிட்டிக்கு விவசாய அமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசி திரு. ...... எஸ். எச். சில்வா தலைமை தாங்குவார்.

இக்கமிட்டியில் கூட்டுறவு அபிவிருத்தி கமிஷனர் திரு. எச். எஸ். வனசிங்கா, விற்பனை இலாகா கமிஷனர் திரு. எல். பி. ராஜகருணா, விவசாய உதவிஅதிபர் டாக்டர் ரி. செனிவரத்ன, விவசாயிகள் சேவை கமிஷனர் திரு கே. சிற்றம்பலம், திரு. பிக்கன் ஆகியோர் கடமையாற்றுவார்கள்.

தற்பொழுது 12 விற்பனை இலாகா கடைகள் கொழும்பில் இருக்கிறதென்றும் இக்கடைகள் மூலம் மரக்கறி விற்பனை செய்யப்படுகிறதென்றும் கூட்டுறவு சங்கம் மூலமும் மரக்கறி விற்பனை செய்யப்படுகிறதென்றும் விற்பனை இலாகா கமிஷனர் தெரிவித்தார்.

—

## சீன கம்யூனிஸ்ட் கட்சிமீது கண்டனம்

பெல்கிரேட், ஜன. 23

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கையைக் கண்டித்து யூகோஸ்லேவிய ஜனதிபதி மார்ஷல் டிட்டோவும் இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் ஒரு கூட்டறிக்கை வெளியிட்டனர்.

மூன்ருவது உலக யுத்தம் ஏற்பட்டால் உலகம் நாசமாகிவிடுமெனவும் அவர்கள் அந்த அறிக்கையில் அச்சம் தெரிவித்துள்ளனர்.

—

லாவோஸ்

## தலைவர்கள் சந்திப்பு

வியன்டைன், ஜன. 23

லாவோஸ் வலதுசாரித் தலைவர் ஜெனரல் பூமி நொசாவான், இடதுசாரி, நடுநிலைமைத் தலைவர்களைச் சந்தித்து பேசத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

—

## 107 சோஷலிஸ்ட் கட்சியினர் கைது

ஆமதாபாத், ஜன. 23

மத்திய பிரதேச அரசாங்கம் விதித்துள்ள தடையை மீறி ஊர்வலம் நடத்த முயன்றதாக பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 107 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

—

## 'அறிவை வளர்க்க உதவுக'

யாழ்ப்பாணம், வியாழன்

"வேலைவாய்ப்புக்காகமட்டும் நூல் நிலையப் பொறுப்பாளர் வகுப்பில் சேர்ந்து பயிலக்கூடாது. இது ஒரு சேவை என எண்ணி இப்பாடத்தைக் கற்க வேண்டும். நூல் நிலையப் பொறுப்பாளர்கள் மிக்க அன்புடன் பழகவேண்டும்' என வடபகுதி முன்னை நாள் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் நூல் நிலையப் பொறுப்பாளர் பயிற்சிக்கான இரண்டாவது தொடரான வகுப்பை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## "கைலஞ்சம் கொடுக்காதீர்கள்"

யாழ்ப்பாணம், வியா.

"எவருக்காவது கைலஞ்சம் கொடுக்காதீர்கள். அப்படி யாராவது கைலஞ்சம் கேட்டால், எனக்குத்தெரிவியுங்கள். நான் தகுந்த நடவடிக்கை எடுப்பேன்" என்று சாவகச்சேரி புதிய நகர சபைத்தலைவர் திரு. ஆர். டி. சிவகுரு நகர சுத்தி தொழிலாளர் மத்தியில் பேசும்போது கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: "நகரத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டியது உங்கள் கடமை. உங்களுக்கு ஒரு குறையுமில்லாது பார்த்துக்கொள்ளவேண்டியது தலைவராகிய எனது கடமை. நான் கடமையில் கண்ணுங்கருத்துமாய் இருப்பேன். அதேபோல நீங்களும் உங்கள் கடமையில் கண்ணுயிருத்தல் வேண்டும். உங்களுக்குள்ளகுறைகளை என்னிடம் தெரிவியுங்கள். நான் அக்குறைகளை நீக்குவதற்கு ஏற்றவழிவகைகள் செய்வேன். நகரத்தின் சுகாதாரம் உங்கள் கையில் தான் இருக்கிறது. நகர மக்களுக்கு சுகாதாரவிஷயத்தில் குறைவில்லாது பார்த்துக்கொள்ளுங்கள்."

—

## "பிக்குகளின் சேவை அவசியம்"

—டட்லி

பொல்காவலை, வியா.

"பௌத்த பிக்குகளைப் பாடசாலைகளில் போதிப்பதற்கு அனுமதிக்கக் கூடாதென்ற அபிப்பிராயம் அண்மையில் மக்களிடையே இருந்தபோதிலும் இந்நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு பௌத்த பிக்குகளின் சேவை அவசியம்" என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

இந்த அரசாங்கம் பௌத்த பிக்குகளுக்குக்கூட வரி போட்டுப் பணம் வசூலிக்க முயற்சி செய்து வருகிறதென்றும் இச்செய்கை சமயத்தை முற்ருக அழிக்கக்கூடிய ஒரு வழியென்றும் அவர் தொடர்ந்து கூறினர்.

—

## கேள்விப்பத்திர சபையின் சிபார்சு வீடமைப்பு மந்திரி ஏற்ருர்

கொழும்பு, புதன்

வீடமைப்பு அமைச்சின் கேள்விப்பத்திர சபையின் சிபார்சுகளை வீடமைப்பு மந்திரி திரு. பதியுதீன் மாமூத் நேற்று அங்கீகரித்தார். இச்சபை செய்துள்ள சிபார்சில், 75 கோடி ரூபாவில் கட்டப்படவிருக்கும் தொழிலாளர், நடுதர வகுப்பினருக்குரிய வீடமைப்புத் திட்டத்திற்கான கேள்விப்பத்திர விண்ணப்பங்களைப் பிற நாடுகளுக்கும் அறிவிக்கவேண்டும்.

வீடமைப்பு மந்திரியின் தலைமையில் அமைச்சின் கேள்விப் பத்திரசபை கூடியபொழுது, இப் பெரிய வீடமைப்புத் திட்டத்திற்கான மாதிரிப்படம் வரையப்பட்டது.

இந்த வீடமைப்புத் திட்டத்திற்கான நிபந்தனைகள், விண்ணப்பங்கள் ஆகியவற்றை இலங்கையிலுள்ள எல்லா பிற நாட்டு தூதராலயங்களுக்கும் அனுப்பிவைக்குமாறு மந்திரி கேட்டுக்கொண்டார்.

—

## பிரான்ஸ் அங்கீகாரம்

பாரிஸ், ஜன. 23

மக்கள் சீனக்குடியரசை பிரான்ஸ் அங்கீகரிக்க உத்தேசித்திருப்பதாக பிரெஞ்சு வெளிவிவகார மந்திரி நேற்று பிரெஞ்சு சட்டசபையில் தெரிவித்தார்.

## படகுக்காரரின் பாரபட்சம்

### அரசாங்க அதிபருக்கு யாத்திரிகர் புகார்

யாழ்ப்பாணம், வியா.

நயினதீவு அம்பாள் வழிபாட்டிற்கு சென்ற கோஷ்டியொன்றை சர்வாதிகார முறையில் மோட்டார்படகு சொந்தக்காரர் தடுத்து நிறுத்தியதாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த வி. கந்தசாமி என்பவர், யாழ்ப்பாணம் மாவட்ட அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: நயினதீவிற்கு செல்வதற்காக மோட்டார் சொந்தக்காரர் அனுமதி தந்தபின் காலை 9 மணிக்கு வள்ளத்தில் ஏறினேம். எங்கள் யாத்திரைக் கோஷ்டியில் பெண்களும் குழந்தைகளும் இருந்தனர். காலை 9-30 மணிக்கு பஸ்ஸில் வந்த வேருெரு கோஷ்டியை வள்ளத்தில் ஏற்றும்பொருட்டு எங்களைக் கட்டாயப்படுத்தி வள்ளத்திலிருந்து இறக்கினர்கள். இதனல் பெண்களும் குழந்தைகளும் பெரும் கஷ்டத்துக்குள்ளாகினர்கள். நாங்கள் கொண்டுசென்ற சாமான்களும் பழுதடைந்தன.

இது சம்பந்தமாக ஊர்காவற்றுறை எம். பி. திரு வ. நவரத்தினத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

—

## தேயிலைச் செடிக்குள் குழந்தையின் சடலம்

கொஸ்வத்தை, வியா.

பூகலை பிரிவைச் சேர்ந்த தோட்டத்தில், சாக்கினுல் சுற்றப்பட்ட பச்சிளங் குழந்தையொன்று, தேயிலைச் செடிகளுக்கடியில் புதைக்கப்பட்டிருந்ததை தோட்டக் காவலாளி கண்டுபிடித்து பொலிஸாரிடம் தெரிவித்தார்.

மரணவிசாரணை அதிகாரி திரு. எல். ஜே. டபிள்யூ. குணவர்த்தன மரணவிசாரணை நடத்தினர், காவலாளி காலையில் செல்லும்போது, தேயிலைச் செடிகளுக்கருகில் நாய் ஒன்று குரைத்துக் கொண்டிருந்ததாகவும், அவ்விடத்தில் தேடிய பொழுது குழந்தையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக 19 வயதுடைய சி. கெங்கம்மா என்ற பெண்ணை பண்டாரவளைப் பொலிஸார் கைது செய்து சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளார்கள்

## முஸ்லிம்கள் ஆட்சேபம்

மாவனல்லை, வியாழன்

கண்டி முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மூடுவதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக இங்குள்ள முஸ்லிம்கள் ஒரு ஆட்சேபக் கூட்டமொன்றை நடத்தினர்கள்.

முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் அளித்து வந்த வசதிகள் சிறிதுசிறிதாகப் பறிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கும் தீர்மானமொன்று கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கண்டி முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதை ஆட்சேபித்து பிரதமருக்கும் கல்வி மந்திரிக்கும் தந்திகள் அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

—

## அரசாங்கத்துடன் ஒத்துழைப்பு

கண்டி, வியாழன்

பௌத்த சமயத்தை விருத்தியடையச் செய்வதற்கும், இந்நாட்டில் பௌத்த கலாசாரத்தை வளர்ப்பதற்கும், அரசாங்கத்திற்குத் தனது முழுமனதான ஆதரவை வழங்க ஆயத்தமாக இருப்பதாக மகாநாயக்கதேரோ, கல்விமந்திரி திரு. பி. பி ஜி. கலுகல்லையிடம் தெரிவித்தார்.

இந்நாட்டிலுள்ள பௌத்த பிக்குகள் பற்றித் தெரிவித்தபோது இலங்கையில் 86,000 பிக்குகள் இருப்பதாகவும் ஆனல் பர்மாவில் 60,000 பிக்குகள் மட்டுமே இருப்பதாகவும் அப்படியிருந்தும் பர்மாவில் பௌத்தமதம் நன்கு வளர்ந்திருப்பதாகவும் கூறினர்.

—

## 700 பிரதிகளும் அழிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

அண்மையில் வெளியிடப்பட்ட அமெரிக்க சஞ்சிகையான 'டைம்'மின் 14 கட்டுக்களை அழிப்பதற்கு சுங்க இலாகா தீர்மானித்துள்ளது.

கடந்தவாரம் இலங்கைவந்து சேர்ந்த சஞ்சிகையை சுங்க இலாகா தடை செய்துவைத்திருந்தது. பிரதம மந்திரிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக இச்சஞ்சிகையில் எழுதப்பட்டிருந்தபடியினல் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இலங்கைக்கு வந்து சேர்ந்த 700 பிரதிகளையும் அழிக்கத் தீர்மானித்துள்ளதாக இறக்குமதியாளருக்கு இப்பத்திரிகை அறிவித்தது.

## அரசியல் வாழ்வு மாற்றத்திற்குமுன்னேடி

கொழும்பு, வியா.

'பொரளை இடைத் தேர்தலில் இடதுசாரி ஐக்கிய முன்னணி அடைந்துள்ள வெற்றி இலங்கை அரசியல் வாழ்வில் ஏற்படக் கூடிய புதிய மாறுதல்களுக்கான ஒரு முன்னேடி' என கொழும்பு மத்திய தொகுதி எம். பி. திரு. பீட்டர் கெனமன் இலங்கை எண்ணை கொழும்பு கார்ப்பரேஷன் ஊழியர் சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு கெனமன் மேலும்பேசுகையில் கூறியதாவது:—

பொரளை இடைத்தேர்தல் முடிவு நாடு முழுவதும் யு. என். பி.யையே சார்ந்து செல்கிறது என்றதை பொய்யாக்கி விட்டது. இடதுசாரி ஐக்கிய முன்னணியால்தான் யு. என். பி.யைத் தோற்கடிக்க முடியும் என்பதை இந்த இடைத்தேர்தல் முடிவு நிரூபித்து விட்டது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியைப் பிளவுபடுத்த எண்ணும் இடதுசாரிச் சக்திகளுக்கும் இது மக்களால் அளிக்கப்பட்ட நல்ல பாடம் என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்!

இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தோடு இணைந்திருந்த மேற்படி சங்கம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் இயங்கும் சம்மேளனத்துடன் இணைவதெனவும் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்தலைவர் திரு. என். ஆர்தர் பெர்னண்டோ தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

—

## மஸ்கெலியாஓயா மின்சாரத் திட்டம்

கொழும்பு, வியா.


மஸ்கெலியாஓயா ஜல மின்சாரத் திட்டத்தின் முதலாம் கட்ட வேலைகளுக்கு காணி, நீர்பாசன மந்திரி திரு. வி. பி டி' சில்வா அனுமதி பெற்றிருக்கிருர். ரூபா 28 கோடியே 60 லட்சம் செலவில் நிறைவேற்றப்படவிருக்கும் இத் திட்டம் விரைவில் ஆரம்பமாகும் என்றும், 1967-ல் முதலாம் கட்டம் பூர்த்தியாகும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கனடா இத் திட்டத்திற்கு 80 லட்சம் டாலர் கடன் வழங்கியிருக்கிறது.

—

கொழும்பு, வியாழன்

சுதந்திர தினத்தன்று கொண்டாடப்படவிருந்த சாரணர் பொன்விழா மார்ச் மாதத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

இந்தக் கொண்டாட்டங்கள் காலியில் நடைபெறவிருக்கின்றன.



நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகராலயத்தில் தைப்பொங்கல் உற்சவம் நடைபெற்ற பொழுது பிரம்மஸ்ரீ இ. ஞானசேகரக் குருக்கள் மார்கழி மாதம் 29-நாட்களிலும் நல்லூர் தேவஸ்தான சுற்ருடல் வீதிகளிலும் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான சுற்ருடல் வீதிகளிலும் அதிகாலை 3 மணி முதல் 7 மணிவரையும் திருவெம்பாவை பஜனை செய்த நல்லூர் பஜனைச்சபையைக் கௌரவித்தும் அன்று அங்கு கதாப்பிரசங்கம் நிகழ்த்திய மணிபாகவதர் சீடன் திரு. எஸ். கணேசசுந்தரத்திற்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தபொழுதும் எடுக்கப்பட்ட படம்.

## சமயப்பிரசங்கங்களின் அவசியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற செவ்வாய்க்கிழமை மூன்லீனாள் உதவி வித்தியாபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் அகில இலங்கை பொதுஜன சேவை சங்கத்தால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வெள்ளிக்கிழமை பிரசங்கத்தை ஆரம்பித்து வைக்கும் பொழுது, இச் சங்கம் இதுவரை மூன்று தேவஸ்தானங்களில் சமயப்பிரசாரங்கள் செய்வித்து வருவது பாராட்டுக்குரியதெனவும் அது சமய வளர்ச்சிக்கு இன்றியமையாத சேவையெனவும் நாவலர் பிரான் அடிச்சுவட்டைப் பின்பற்றி இங்கும் அதை நடாத்துவதால் ஆதியில் நாவலர் பிரான் இதே தேவஸ்தானத்தில் பிரசங்கஞ் செய்ததை நினைவூட்டுகின்றதெனவும், ஒவ்வோர் சைவ நன்மக்களும் வெள்ளிக்கிழமைகளில் இப்பிரசங்கங்களைச் செவியுற்று நற்பயனெய்துவதுடன் தத்தம் சிறார்களையும் சமயவளர்ச்சியில் ஊக்குவிக்க வேண்டுமென வேண்டிக்கொண்டதுடன் இப் பிரசங்கத்தைத் தொடர்ச்சியாக நிறைவேற்ற இடவசதியும் ஒலிபெருக்கி வசதியும் செய்துவரும் தேவஸ்தான நிர்வாகஸ்தர்களுக்கு நன்றி பாராட்டினர்.

சமயப்பிரசாரகர் திரு. சி. தம்பிஐயா "வரகுணபாண்டியனுக்கு சிவலோகம் காண்பித்தலை" என்னும் பொருள் பற்றி பிரசங்கம் நிகழ்த்தி இடையிடையே பண்ணுடன் மறையும் ஓதினர்.

—

## மலேசியாவை ஒழிக்கட்டுமாம்

லண்டன், ஜன. 23

மலேசியாவில் யுத்தத்துக்கு முடிவு கட்டுமாறும் மலேசிய சமஷ்டியை ஒழிக்குமாறும் கோரி பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக் காரியதரிசி பிரிட்டிஷ் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

—

## வானொலிநிகழ்ச்சிகள்

### வெள்ளி 24-1-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியசிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்,6-15 பாங்கு 6-30 கிராம சஞ்சிகை.

இரவு 6-45 ஞானாஞ்சலி, 7-15 கதாப்பிரசங்கம் — த. பொன்னம்பலம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, உருதுப்பாடல்கள், நாடகம் — 'தம்பதிகள்', இஸ்லாமியகீதங்கள், 9-15 மதிப்புரை, 9-30 நேயர்விருப்பம், 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 காந்தி அஞ்சலி, 7-30 நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-35 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள்,7-30 பொங்கியெழும் பாரதம்,9-15 இசைமாலை,9-30 மெல்லிசை, 9-45 பலகணி, 10-00 திரைப்படஇசை.

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று வெள்ளிக்கிழமை அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சைவ சமய அபிவிருத்திச் சங்க ஆதரவில் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகராலயத்தில் காலை 8-45 மணி முதல் 9-45 மணி வரை ஸ்ரீமதி குணேஸ்வரி துரைசிங்கம் ஆசிரியை "செம்மனச் செல்வி வரலாறு" என்னும் பொருள் பற்றியும் சங்க சமயப் பிரசார சபையினரால் நல்லூர் தேவஸ்தான காவலரின் ஆதரவில் ஆசிரியர் திரு. ச. சதாசிவம் "சமயதத்துவங்கள் என்னும் பொருள் பற்றியும் சங்கச் சைவ இளைஞர் மன்ற ஆதரவில் நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் மாலை 7 மணி முதல் 8 மணி வரை பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் 'விநாயகர் என்னும் பொருள்பற்றியும் பிரசங்கங்கள் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

—

## தாலிக்கொடி திருட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று முன்தினமிரவு மல்லாகத்திற்கருகாமையிலுள்ள ஆசிரியர் கார்த்திகேசு வீட்டில் திருடர்கள் புகுந்து அவரது மனைவியின் தாலிக்கொடியையும், பணத்தையும் அபகரித்துச் சென்றதாக தெரிய வருகிறது.

அந்நேரம் வீட்டிற்கு வெளியில் வந்த ஆசிரியர் கார்த்திகேசுவையும் திருடர்கள் மண்வெட்டியால் தாக்கிக் காயப்படுத்தினர்களாம். இத்திருட்டு சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகிறார்கள்.

—

## பாடசாலையில் பாரபட்சம்

நுவரெலியா, வியாழன்

அக்கரப்பத்தனையிலுள்ள தமிழ் பிள்ளைகளுக்கு பாடசாலை இல்லையென்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது பிரதிநிதி திரு. பி. பெருமாள் நுவரெலியா எம். பி. திரு. பி. வில்லியம்பெர்ணண்டோவிற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அங்கேயுள்ள ஒரே ஒரு பாடசாலையில் சிங்களப் பிள்ளைகள் மட்டும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களென்றும், இதனால் அங்குள்ள 300 தமிழ் பிள்ளைகள் புறக்கணிக்கப்படுவதாகவும் எம். பி.க்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரபட்சம் காட்டும் இச்செயலை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் இங்குள்ள ஒரே ஒரு பாடசாலையும், தமிழ் போஸ்ட் மாஸ்டர் ஒருவரின் முயற்சியாலேயே ஆரம்பிக்கப்பட்டதென்றும், எம். பி.க்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

—

## 59 மொழிகளில் ஒலிபரப்பு

புதுடில்லி, ஜன. 22

இந்தியாவில் கிராம மக்களுக்கு 30 ஒலிபரப்பு நிலையங்களிலிருந்து 11 மொழிகளிலும், 48 கிளை மொழிகளிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவதாக மந்திரி சதயநாராயண் சின்ஹா அறிவித்தார்.

—

## ஜப்பானிய நடனக் கோஷ்டி

கல்கத்தா, ஜன, 22

12 பேரடங்கிய ஜப்பானிய நடனக் கோஷ்டி இன்று டில்லியிலிருந்து கல்கத்தா வந்து சேர்ந்தது. புகழ் பெற்ற வங்க நாவலாசிரியர் சரத்சந்திரர் மீது ஜப்பானியர்களுக்குள்ள மதிப்பை உணர்த்தும்பொருட்டு 4 நாள் நடன நிகழ்ச்சியில் வசூலாகும் தொகை சரத்சந்திரர் நினைவு நிதியில் சேர்க்கப்படும்.

## கல்கத்தாவுக்கு சமாதானக் குழு

சென்னை, ஜன, 22

கிழக்கு பாகிஸ்தானிலும், மேற்கு பாகிஸ்தானிலும் வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு உதவும்பொருட்டு ஒரு சமாதானக்குழு சென்னையிலிருந்து புறப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. மத்திய ராஜ்ய அரசாங்கங்களின் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் இன்னும் ஒரு வாரகாலத்தில் இத்தூதுக்குழு கல்கத்தாவுக்குப் புறப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இருபத்திமூன்று பிரமுகர்களை அமைப்பாளர்களாகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. திரு. ராஜாஜி, சென்னை முன்னாள் மேயர் டி. எஸ். ராமசாமி ஐயர், தற்போதைய மேயர் சிவசங்கர மேத்தா, ஐக்கிய அரபுக் குடியரசு அல் அஜார் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜனாப் அஹமது ஷர்கௌர் ஆகியோரும் அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

—

## மகாவலியில் எண்ணை ஊற்று?

நாவலப்பிட்டி, வியா

சேலம் பாலத்துக்கு அருகிலுள்ள மகாவலி கங்கை ஆற்றுப்படுகையில் தோண்டப்பட்ட சிறிய கிணற்றிலிருந்து எண்ணை ஊறி வருவதைத் தொடர்ந்து இதைப் பார்வையிடப் பல மக்கள் இங்கு கூடிவருகிறார்கள்

இரு அடி ஆழமுள்ள இந்தக் கிணறு நாவலப்பிட்டி நகரசபை உப-தலைவர் திரு. பி. ஏ. டேவிட் பெரேரா தலைமையில் சென்ற சிலரால் தோண்டப்பட்டது. கிணற்றின் அடியிலிருந்து வெளி வந்த பொருளைப் பரிசோதனை செய்தபோதே அதில் எண்ணை இருப்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டன.

இப்பகுதியைச்சேர்ந்த பலர் விளக்கெரிப்பதற்கு இதை உபயோகித்தார்கள்.

இந்த எண்ணை டீசல் மண்டி எண்ணை எனச் சிலரால் கருதப்படுகிறது.

—

## கோர்ட்டிலிருந்து துப்பாக்கி திருடப்பட்டது

ஹொரணை, வியாழன்

ஹொரணை மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து சென்ற 21 ம் திகதி துப்பாக்கிகள் உட்பட சில பொருட்கள் களவாடப்பட்டுவிட்டதாக அறியப்படுகிறது.

காவலாளர் இல்லாத சமயம் ஓடுகளைப் பிரித்து கோர்ட்டுக்குள் இறங்கி இப்பொருட்களைக் களவாடிச் சென்றிருக்கலாமென நம்பப்படுகிறது. இதுசம்பந்தமாக இதுவரை யாரும் கைதாகவில்லை. ஹொரணைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஏ. டபிள்யு.ஜோ ஆசிம் விசாரணை நடத்திவருகிறார்.

—

## மந்திரியை நீக்க கோரிக்கை

கொழும்பு, வியாழன்

இந்த நாட்டின் வருமானமான கோடிக்கணக்கான ரூபாய்கள் பாழாக்குவதற்குக் காரணமாகவிருக்கும், போக்குவரத்து மந்திரி திரு. மகாநாம சமரவீராவை மந்திரிப் பதவியிலிருந்து நீக்கும்படி, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம், அகில இலங்கை குவாரி கிளார்க் யூனியன் கூட்டத்தில் நிறைவேறியது.

துறைமுக வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்படி மந்திரிசபையைத் தூண்டியதற்காக, அரசாங்க பாராளுமன்ற குழுவிற்கும் இக்கூட்டத்தில் நன்றி கூறும் தீர்மானம் ஒன்றும் நிறைவேறியது.

## பாகிஸ்தானியர் சட்ட விரோதக் குடியேற்றம்

### பர்மா பத்திரிகை தகவல்

ரங்கூன், ஜன, 23

பர்மாவினுள் பாகிஸ்தானியர் சட்டவிரோதமாகக் குடியேறிவருவது பர்மா அதிகாரிகளுக்குக் கவலையளிப்பதாக பர்மிய ஆங்கிலத் தினசரியான 'கார்டியன்' எழுதியுள்ளது.

சுமார் இரண்டரை லட்சம் பாகிஸ்தானியர் பர்மாவுக்குள் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ளதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிப்பதாக 'கார்டியன்' தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

—

## தீவுப்பகுதியில் கிராமசபைத் தேர்தல்

ஊர்காவற்றுறை, வியாழன்

தீவுப்பகுதியில் உள்ள கிராமசபைகளின் தேர்தல்கள் மார்ச் மாதம் தொடக்கம் நடைபெறவிருப்பதாக அறியப்படுகிறது. வாக்குரிமை பதிவு செய்யும் நிலையங்களைக் குறிப்பிட்டு எழுதுமாறு கிராமசேவையாளர்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர்வேலணை, நாரந்தனைக் கிராமசபைகளின் தேர்தல்கள் மே மாதத்தில் நடைபெறலாம் எனத் தெரிகிறது.

வட்டாரப் பிரிவினை சம்பந்தமாக பின்போடப்பட்ட கிராம சபைகளுள் அனலைதீவு கிராம சபையும் ஒன்றாகும் எனவும் அறியப்படுகிறது. தீவுப்பகுதியைப் பொறுத்த அளவில் கட்சி அடிப்படையில் அபேட்சகர்கள் பேட்டியிடுவது சாத்தியப்படாது எனவும் கூறப்படுகிறது.

—

## யுதாண்ட் வேண்டுகோள்

நியுயோர்க், ஜன. 23

புனித றம்ழான் மாதத்தில் எல்லைகளில் அமைதியைப் பாதுகாக்குமாறும், பொறுமையைக் கடைப்பிடிக்குமாறும் மலேசியாவையும், இந்தோனேஷியாவையும் கேட்டுக் கொண்டுள்ளதாக ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் நேற்று நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

ஐ. நா.விலுள்ள இந்தோனேஷிய, மலேசிய நிரந்தரப் பிரதிநிதிகளுடன் மலேசிய, இந்தோனேஷிய நிலைமை பற்றித் தாம் தொடர்புகொண்டுள்ளதாகவும் யுதாண்ட் தெரிவித்தார்.

—

## பீடி இறக்குமதி செய்தால் ராஜினுமா

### எம். பி. சபதம்

மீரிகம, வியாழன்

இலங்கைக்கு வெளி நாடுகளிலிருந்து பீடி இறக்குமதி செய்தால் தாம் ராஜினுமாச் செய்யப் போவதாக மீரிகம எம். பி. திரு. விஜபாகு விஜயசிங்கா தெரிவித்துள்ளார்.

பீடித் தொழிலாளர் தூது கோஷ்டியொன்று திரு, விஜயசிங்காவைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பீடி இறக்குமதி செய்வதில்லையென அரசாங்கம் செதிருந்த உறுதி காப்பாற்றப்பட வேண்டுமென்றும் அவர் கூறினர்.

## மரண அறிவித்தல்

கரவெட்டியைச் சேர்ந்த பிரபல ஆயுள்வேத வைத்தியர் ஈ. மார்க்கண்டு அவர்கள் 23-1-64 ல் சிவபதமெய்திவிட்டார். அன்னாரின் பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனத்துக்காக இன்று (24-1-64) எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: சி சீவரத்தினம், ஈழநாடு லிமிட்டெட்


## வரி விளம்பரம்

### வாடகைக்கு

யாழ்ப்பாணப் பட்டினத்தில், தொலைபேசி முதலிய சகல நவீன வசதிகளுடனும் அமைந்த 2000 சதுர அடி முதல் மாடி ஆபீஸ் இடம் உண்டு.

ஈழநாடு மேற்பார்த்து, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு மனுச்செய்க. 1896 A

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் உடுவில் வீதியில் எட்டுப் பரப்பில் அமைந்த மின்சாரமும், நாலு பெரிய அறைகளும் மற்றும் எல்லாவித நவீன வசதிகளுடனும் கூடிய ஒரு வீடு வாடகைக்கு உண்டு.

"வீடு"ஈழநாடு மேற்பார்த்து என்று மனுச்செய்க. 1897

### அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி, 222-ம் இலக்கக் கடையில் கந்தையா பரமு அவர்களிடம் 1-4-60 தொடக்கம் 31-5-61 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாத வைகளை 14-2-64 வெள்ளிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
கோட் கொமிஷனரும் விலை மதிப்பாளரும்.
643, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம். 1898

### காரியாலயத் திறப்புவிழா

இலாபநிதிச் சங்கம்
வழக்கம்பரை, சுழிபுரம்

அன்புடையீர்!

நிகழும் சோபகிருது ஸூ தை மாதம் 15-ந்திகதி(28-1-64) செவ்வாய்க்கிழமை நண்பகல் 1 மணி 13 நிமிஷம் அளவில் வரும் இடபலக்கின சுபமுகூர்த்தவேளையில் புதிதாக நிர்மாணித்த கட்டிடத்தில் காரியாலயம் திறக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம்அங்கத்தவர்களையும் அனுதாபிகளையும் சமூகம் தரும்படி தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்

எமது தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரும் ஷை சங்கப் போஷகருமான உயர்திரு அ. அமிர்தலிங்கம் அவர்கள் சைவசமய ஆசார விதிப்படி குத்துவிளக்கேற்றித் திறந்து வைப்பார் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம். மற்றும் பல முக்கியஸ்தர்களும் சமூகம் தருவார்கள்.

குறிப்பு:- சர்வதேசிய விவாக அந்தியகால சேம லாபநிதிச் சங்கம் என்னும் பெயருடன் திகழ்ந்த ஷை சங்கம் இன்று தொடக்கம் இலாபநிதிச் சங்கம் என்னும் பெயருடன் விளங்கி வரும் என்பதை அறியத்தருகின்றோம்.

தங்கள் வரவை எதிர்பார்க்கின்றோம்.

இங்ஙனம் வ. து. இராமநாதன், காரியதரிசி, வழக்கம்பரை, சுழிபுரம். 19-1-64. 1895

### தேவை

உள்நாட்டுத் தயாரிப்புகளை விற்பனை செய்யவும் பிரசாரம் செய்யவும் ஆர்வமுள்ள வாலிபர்கள் மனுச்செய்க. அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 1876

### வாடகைக்கு

நல்லூரில் நாலு அறைகள் கொண்டதும், தண்ணீர் முதலிய எல்லாவித வசதிகளுடனும் கூடிய ஒரு வீடு வாடகைக்கு உண்டு.

இல: 11, செட்டித்தெரு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். 1900

# "கண்ணீர்ப்புகை மட்டுமே பிரயோகிக்கப்பட்டது"

## நிக்கவரெட்டியா ஊர்வலம்பற்றி பிரதமர் அறிக்கை

கொழும்பு, புதன்

நிக்கவரெட்டியாவில் இருந்து கொழும்பு நோக்கி ஊர்வலமாக திரு. முதியான்சே தென்னக்கூனின் தலைமையில் வந்த விவசாயிகள் கூட்டத்தைக் கலைக்க கண்ணீர்ப்புகை மட்டுமே உபயோகிக்கப் பட்டதென்றும், பொலிஸார் தடியடிப் பிரயோகமோ, அல்லது வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமோ செய்யவில்லை என்று பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று செனட் சபையில் செனட்டர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். அரசாங்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும், எவ்வளவு செலவானாலும் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டியே தீரும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

நிக்கவரெட்டியாவில் உள்ள அய்யநாயக்கா வளவில் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ள முன்னாள் நிதி மந்திரி திரு. முதியான்சே தென்னக்கூனை இடதுசாரி முன்னணித் தலைவர்களான திரு. றொபேர்ட் குணவர்த்தனவும், திருமதி விவியன் குணவர்த்தனவும் போய் பார்வையிட்டனர். அவருக்கு ஆதரவு தெரிவித்த இடதுசாரித் தலைவர்கள் சாகும்வரை உண்ணாவிரதத்தை கைவிடுமாறும் கேட்டுக் கொண்டனர். அப்படி உண்ணாவிரதத்தைக் கைவிட்டால் திரு. முதியான்சேக்கு நல்ல ஆதரவு கிடைக்கும் எனவும் தெரிவித்தனர். திரு. முதியான்சேயை கொழும்புக்கு வருமாறு திரு. றொபேர்ட் குணவர்த்தன கேட்டார். சாகும்வரை உண்ணாவிரதத்தை கைவிடப்போவதில்லை எனவும் நிக்கவரெட்டியாவிலிருந்து கால்நடையாக கொழும்புக்குப் போக விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். திரு. தென்னக்கூனின் ஆதரவாளர்கள் நாளை பார்லிமெண்டுக்கு முன்னால் கூடுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. இவர்களை இங்கு வந்து திரு. தென்னக்கூன் சந்திப்பார் எனவும் நம்பப்படுகிறது.

நிக்கவரெட்டியாப் பகுதியில் காவல்புரிந்து வந்த பொலிஸார் வாபஸ் பெறப்பட்டுள்ளனர். இப்பொழுது அங்கு அமைதி நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

விவசாயிகள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லவும், ஊர்வலமாகச் செல்ல அவர்களுக்கு உரிமை உண்டெனவும், அவர்கள் கொழும்புக்கு அணிவகுத்து வந்ததை அரசாங்கம் தடைசெய்தது ஜனநாயகத்துக்கும், நீதிக்கும் புறம்பானது என்றும் திரு. பிலிப் குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற பொலிசாரின் செயல் அரசாங்கத்தின் தூண்டுதல் என்றும், 1953-ம் ஆண்டு யூ. என். பி. மக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததற்கு இது சமமாகும் எனவும் செனட்டில் திரு. டொறிக் டி' சொய்சா தெரிவித்தார்.


### இப்பொழுது திரையிடப்படுகிறது!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **சினாமா** (வெள்ளவத்தை) **நவா** (கொம்பனித்தெரு)

**கல்யாணி** (நாவலப்பிட்டியா) **ஸ்ரீகிருஷ்ணா** (திருமலை) **மொடேர்ன்** (பதுளை) **விஜிதா** (ஹட்டன்)

**விஜயா** (மட்டக்களப்பு) **ஜெமினி** (குருகலை)

வியப்பு, தகைப்பு, விறுவிறுப்பு, வெள்ளமெனத் துள்ளிவரும் இசையமைப்பு!

உங்களை மகிழ்விக்கும் அற்புதப் படைப்பு!

உணர்ச்சிக் கோர்வையிலே உருவான

உன்னத குடும்பச் சித்திரம்!!



எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜா தேவி

எஸ். வி. சுப்பையா - எம். என். நம்பியார்

எம். வி. ராஜம்மா - நாகேஷ் - அசோகன்

மற்றும் பலர் திறம்பட நடித்த

சரவணா பிலிம்ஸ்

# பணத் தோட்டம்

தயாரிப்பு ஜி. என். வேலுமணி — டைரக்ஷன் கே. சங்கர்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) — ராஜ்கபூர் — பத்மினி நடித்த **ஜிஸ் தேஷ் மென் கங்கா பேதிஹே**

**மனோகரா** (யாழ்ப்பாணம்) — ரங்கராவ் — பானுமதி நடித்த **அன்னை**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## தொழில் நுட்பக்கல்லூரி

## வகுப்புக்குப் போகாவிடில் நீக்கப்படுவர்

கொழும்பு, புதன்

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் நாளைக்கு விரிவுரைகளுக்குச் செல்லாவிட்டால் அவர்களின் பெயர்கள் இடாப்புகளிலிருந்து நீக்கப்படும் என தொழில் நுட்பக்கல்லூரி இலாகா டைரக்டர் திரு. எஸ். எல். டி' சில்வா தெரிவித்துள்ளார். நாளைக்கு வகுப்புக்குப் போக விரும்பும் மாணவர்களுக்கு பூரண பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்படும் எனவும் அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## 'நமது கலாசாரத்தை நாம் வளர்க்க வேண்டும்'

கொழும்பு, வியா.

"நாம் எமது கலையையும் கலாசாரத்தையும் வளர்க்கும் பணியில் ஈடுபட வேண்டும். இதுவே நாம் எமது பிற்காலச் சந்ததியினருக்குச் செய்யும் பெரிய தொண்டாகும்" என 'மேகலை' என்ற தமிழ் நாடகத்திற்குத் தலைமை தாங்கிய கிழக்கிலங்கை காகித கூட்டுஸ்தாபனத் தலைவர் திரு. கே. சி. தங்கராசா குறிப்பிட்டார்.

இந்த நாடகம் சென்ற 19-ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு, புதன்

இலங்கை மீன்பிடித் தொழிலை திரைப்படமாக்க, ஐ. நா. திரைப்படப் பிரிவு ஒழுங்கு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

பாதுகாப்பு வெளிநாட்டு அமைச்சு இன்று விடுத்துள்ள ஒரு செய்தியில், நேற்று நிக்கவரெட்டியாவில் நடைபெற்ற விவசாயிகள் ஊர்வலம்பற்றி பொலிசாருக்குக் கிடைத்த தகவல்பற்றி விவரிக்கிறது.

ஊர்வலம் செல்லும் பாதைகளில் குழப்பம் ஏற்படக்கூடுமென்றும், ஊர்வலத்துக்குப் பின்னால் லொறிகளிலும், கார்களிலும் மண் நிறைக்கப்பட்ட போத்தல்கள் எடுத்துவரப் படுவதாயும் பொலிசாருக்குத் தகவல் கிடைத்ததால் பொலிசார் நடவடிக்கைக்குத் தயாராயிருந்தனர் என்றும், மேலே இரு தடவை சுட்டதாகவும், தடியடிப்பிரயோகம் செய்ததாகவும் கூறப்படுவதை பொலிசார் மறுத்துள்ளனர் என்றும், கண்ணீர்புகை மட்டுமே பிரயோகிக்கப்பட்டதாயும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பொலிஸ் நடவடிக்கையினால் எவருக்கும் காயமில்லை என அறிவிக்கப்படுகிறது.

# தமிழாசிரியர்களுக்கு சிங்களத்தில் காசோலைகள்

## பட்டிருப்பு எம். பி. ஆட்சேபம்

களுவாஞ்சிக்குடி, புதன்

தமிழ் ஆசிரியர்களுக்கு கல்வி இலாகா உதவி டைரக்டர் காரியாலயத்திலிருந்து சிங்களத்தில் காசோலைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இதனால் தமிழாசிரியர்கள் தங்கள் சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதில் வீண் சிரமத்துக்குள்ளாக வேண்டியிருப்பதாகவும் பட்டிருப்பு எம். பி. யும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் உதவி வித்தியாதிபதிக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ப் பகுதிகளிலுள்ள தமிழாசிரியர்களுக்கு சிங்களத்தில் காசோலைகளை அனுப்பி தமிழ்ப்பகுதிகளில் சிங்களத்தை வலோத்காரமாகத் திணிக்க முயற்சி செய்வது வீண் கஷ்டங்களை ஏற்படுத்துவதாக முடியும் என்றும் வழமைபோல் தமிழ் ஆசிரியர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தை அனுப்புமாறும் திரு. இராசமாணிக்கம் தமது தந்தியில் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக தமிழ் ஆசிரியர் சங்கத்துடன் சேர்ந்து உரிய நடவடிக்கைகளை தாம் மேற்கொள்ள விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 'தேர்தல்களின்போது மற்றவர்களை தாக்குபவர்களுக்கு இரக்கம் கூடாது'

யாழ்ப்பாணம், புதன்

"மக்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்காகவே தேர்தல் நடாத்தப்படுகின்றது. அப்படியிருக்க மற்றவர்களை ஒரு பகுதியினருக்கு வாக்களிக்கும்படி பலவந்தப்படுத்தி தாக்குபவர்களுக்கு இரக்கம் காட்டாமல் தண்டனை விதிக்கவேண்டும்" என சென்ற மாதம் நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபைத் தேர்தலின்போது மற்றவர்களைத் தாக்கிய இருவருக்குத் தலா 500 ரூபா அபராதமும், கோர்ட் கலையும்வரை சிறைத் தண்டனையும் விதிக்கையில் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவாலன் குறிப்பிட்டார்.

சிந்தங்கேணியைச் சேர்ந்தவரும், பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைக்குத் தோற்றியிருப்பவருமான குமாரவேலு சிவஞானம் என்பவர் யாழ்ப்பாணம் வன இலாகா ஒழுங்கையைச் சேர்ந்த சாந்தகுமார் சண்முகரத்தினத்தை 15ம் வட்டாரத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் வைத்து தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தார். கொட்டடி சீனிவாசகர் ஒழுங்கையைச் சேர்ந்த முருகேசு கோபாலரத்தினம் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த சின்னையா ராமேஸ்வரம் என்பவரை 12ம் வட்டாரத்திலுள்ள வாக்களிப்பு நிலையத்தில் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டது. இருவரும் தாம் குற்றவாளிகளென ஒப்புக்கொண்டதன் பேரில் மாஜிஸ்டிரேட் அபராதமும் சிறைத் தண்டனையும் விதித்தார்.

யாழ்ப்பாணம் விசேஷ குற்ற விசாரணைப் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் திரு ஈஸ்வரபாதம் வழக்குகளை நடத்தினர். 12ம் வட்டாரத்தில் உள்ள வாக்களிப்பு நிலயத்தில் கொட்டடியைச் சேர்ந்த பொன்னுத்துரை நவரத்தினம் என்பவரைத் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட இராமசாமி நவரத்தினசிங்கம் சுகயீனம் என வைத்திய சாட்சிப் பத்திரம் அனுப்பியிருந்தார். ஆனால் மாஜிஸ்டிரேட் இதைக் கவனியாது அவர்மீது 'வாரண்ட்' பிறப்பித்தார்."

# கல்வி மந்திரிக்கு வேண்டுகோள்

காலி, புதன்

தனிப்பட்ட பாடசாலைகளுக்கு எதிராகவுள்ள சட்டங்களை நீக்கும்படி, திரு. இருதய கன்வென்ட் அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு. டீ. வி. ஏ. குணசேகரா கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லைக்கு சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

தனிப்பட்ட பாடசாலைகளுக்கு நன்கொடை பணம் வழங்குமாறும், அல்லது மாணவர்களிடமிருந்து சிறு தொகை பணம் வசூலிக்க வசதி செய்யும்படியும் பிள்ளைகளுக்கு கல்வி வசதியளிப்பதன் மூலம் தாங்கள் ஒரு தேசிய சேவை செய்து வருவதாகவும், 52 தனிப்பட்ட பாடசாலைகளுக்கு நன்கொடைப்பணம் வழங்குவது நிறுத்தப்பட்டதால் ரூபா 16,000,000 அரசாங்கத்திற்கு மிச்சமென்றும், இதில் சிறு தொகையை அப்பாடசாலைகளுக்கு வழங்கும்படியும் திரு. குணசேகரா தொடர்ந்துபேசும் போது கூறினர்.


# விற்பனையாகிறது

1964, 65, 66, 67-ம் ஆண்டுகளுக்கு

G. C. E. (Ord. Level) பரீட்சைக்கான

இலக்கிய பாடம்

கம்பராமாயணம் — அயோத்தியாகாண்டம

மந்தரை சூழ்ச்சிப்படலமும்

கைகேயி சூழ்வினைப் படலமும்

★

இந்துசமயம் — (அச்சில்)

உரையாசிரியர்

வித்துவான் க. ந. வேலன் அவர்கள்

ஹாட்லி கொலிஜ்,

பருத்தித்துறை.

பக்கம் 250. விலை 3-50.

## கலைவாணி புத்தக நிலையம்

யாழ்ப்பாணம் — கண்டி